winmeen.com

# இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஜனவரி 2021

ஜனவரி 08-15

**1.**வடகிழக்கு இந்தியாவின் முதல் கேலோ இந்தியா விளையாட்டுப்பள்ளி அமைந்துள்ள நகரம் எது?

***அ) ஷில்லாங் ☑***

*ஆ) இம்பால்*

*இ) கௌகாத்தி*

*ஈ) கேங்டாக்*

❖ *கேலோ இந்தியா விளையாட்டுப் பள்ளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஷில்லாங்கின் அஸ்ஸாம் ரைபிள்ஸ் பள்ளியை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தொடங்கிவைத்தார். வடகிழக்கு மாகாணங்களின் முதல் பள்ளியாக அஸ்ஸாம் ரைபிள்ஸ் பள்ளி அமைந்துள்ளது. மொத்தம் ஒன்பது விளையாட்டுப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

❖ *கல்வியுடன் விளையாட்டை ஒருங்கிணைத்து, அதன் வாயிலாக நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்தி வீரர்களின் ஒட்டுமொத்த திறனை வளர்ப்பதே கேலோ இந்தியா விளையாட்டுப் பள்ளிகளின் முக்கிய குறிக்கோளாகும்.*

---

**2.**தேசிய அளவியல் மாநாடு – 2021'ஐ ஏற்பாடு செய்துள்ள ஆராய்ச்சி அமைப்பு எது?

***அ) CSIR ☑***

*ஆ) DRDO*

*இ) ICMR*

*ஈ) ICAR*

❖ *தனது 75ஆவது ஆண்டுக்குள் நுழையும், புது தில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மையம் – தேசிய இயற்பியல் ஆய்வகம், தேசிய அளவியல் மாநாடு 2021'ஐ ஏற்பாடு செய்தது. "நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அளவியல்" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும். தேசிய அளவியல் மாநாட்டில், பிரதமர் மோடி காணொலிக்காட்சிமூலம் தொடக்க உரையாற்றினார்.*

---

**3.** 'தைப்பூசம்' என்பது கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்?

***அ) தமிழ்நாடு ☑***



*ஆ) கேரளம்*

*இ) நாகாலாந்து*

*ஈ) அருணாச்சல பிரதேசம்*

❖ *'தமிழ்க்கடவுள்' முருக வழிபாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட 'தைப் பூசம்' என்ற திருவிழாவை உலகம் முழுமைக்கும் பரவி வாழும் தமிழ் மக்கள் கொண்டாடுகிறார்கள். இந்த நாளை பொது விடுமுறையாக அறிவிக்க தமிழர்கள் கோரியதை அடுத்து, அதற்கான உத்தரவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க.பழனிசாமி வெளியிட்டார்.*

❖ *இந்த விழா, கேரளாவின் சில பகுதிகளிலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் மற்றும் இந்தோனேசியா போன்ற பிற நாடுகளிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.*

---

**4.** அண்மையில் தொடங்கப்பட்ட, "தேசிய அணு கால அளவின்" துல்லியம் என்ன?

*அ) 2.7 நானோ வினாடிகள்*



***ஆ) 2.8 நானோ வினாடிகள் ☑***

*இ) 2.1 நானோ வினாடிகள்*

*ஈ) 2.0 நானோ வினாடிகள்*

❖ *தேசிய அளவியல் மாநாட்டின் தொடக்க விழாவின்போது பிரதமர் மோடி, 'தேசிய அணு கால அளவை' நாட்டுக்கு அர்ப்பணித்தார் . இந்த நடவடிக்கையின்மூலம், இந்திய திட்ட நேரமானது பன்னாட்டு திட்ட நேரத்துடன் ஒத்தமைக்கப்படுகிறது. 2.8 நானோ நொடிகள் என்னும் துல்லியத்துடன் இந்திய நிலையான நேரத்தை தேசிய அணு கால அளவு வழங்கும். தேசிய சுற்றுச்சூழல் தரநிர்ணய ஆய்வகத்துக்கான அடிக்கல்லையும் பிரதமர் நாட்டினார்.*

---

**5.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, கொச்சி – மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தை அமைக்கின்ற பொதுத் துறை நிறுவனம் எது?

*அ) ONGC*

***ஆ) GAIL ☑***

*இ) IOCL*

*ஈ) CIL*

❖ *கேரளாவின் கொச்சிக்கும் கர்நாடகாவின் மங்களூருக்கும் இடையில் 450 கிமீ நீளமுள்ள இயற்கை எரிவாயு குழாய்பாதை, GAIL (இந்தியா) நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. ₹3000 கோடி மதிப்பிலான திட்டத்தை இந்திய பிரதமர் வணிக நடவடிக்கைகளுக்காக திறந்து வைத்துள்ளார். இதன்மூலம், நாள் ஒன்றுக்கு 12 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்டர்டு கியூபிக் மீட்டர் இயற்கை எரிவாயு கடந்துசெல்லும்.*

---

**6.** உலக பிரெய்லி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

*அ) ஜனவரி 2*




*ஆ) ஜனவரி 3*

***இ) ஜனவரி 4 ☑***

*ஈ) ஜனவரி 6*

❖ *உலக பிரெய்லி நாளானது 2018 டிசம்பரில் ஐநா பொதுச் சபையால் நிறுவப்பட்ட பின்னர், ஆண்டுதோறும் ஜன.4 அன்று அனுசரிக்கப்படு –கிறது. பார்வைக்குறைபாடுள்ளவர்கள் பயன்படுத்தும் வாசிப்பு மற்றும் எழுதுதலுக்கான முறையை கண்டுபிடித்த லூயிஸ் பிரெய்லியின் பிறந்தநாளை இந்தத்தேதி குறிக்கிறது. இந்த ஆண்டு, உலகளாவிய தொடுதல்–அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பின் முக்கியத்துவத்தை ஐ.நா சிறப்பித்துக்காட்டுகிறது.*

---

**7.**எக்கருவியை நிறுவுவதற்காக PM கேர்ஸ் நிதிய அறக்கட்டளை ₹120 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது?

***அ) ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலைகள் ☑***



*ஆ) வளி சுத்திகரிப்பான்கள்*

*இ) RO–நீர் சுத்திகரிப்பான்கள்*

*ஈ) ஷிப்ட் மருத்துவமனைகளை உருவாக்குங்கள்*

- *பிரதமரின் அவசரகால மக்கள் உதவி மற்றும் நிவாரண (PM CARES) நிதிய அறக்கட்டளை, நாடு முழுவதுமுள்ள பொது நலவாழ்வு மையங்க–ளில் 162 பிரத்யேக அழுத்த விசை உறிஞ்சுதல் (PSA) பிராணவாயு தயாரிப்பு வசதிகளை நிறுவ ₹201.58 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.*
- *மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தன்னாட்சிபெற்ற அமைப்பான மத்திய மருத்துவ விநியோக விற்பனை கூடத்தால் கொள்முதல் நடத்தப்படும். இந்த ஆலைகள் மருத்துவ தரத்திலான ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யும்.*

---

**8.பின்வரும் எவ்வமைப்பு சமீபத்தில் தனது அனைத்து பெண்கள் அணியையும் எதிர்பாரா பணிகளுக்காக அனுப்பியது?**

*அ) மத்திய ஆயுத காவல் படை*

*ஆ) இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படை*

***இ) தேசிய பேரிடர் மீட்புப் படை ☑***

*ஈ) மத்திய தொழிலக பாதுகாப்புப்படை*

- *கங்கையாற்றின் கரையிலுள்ள உத்தர பிரதேசத்தின் கர் முக்தேஷ்வர் நகரத்தில், எதிர்பாரா பணிகளுக்காக தேசிய பேரிடர் மீட்புப் படையின் அனைத்து பெண் குழுவும் அண்மையில் ஈடுபடுத்தப்பட்டது.*
- *தொழிற்முறை பயிற்சிபெற்ற இந்த அனைத்து பெண்கள் குழு, மீட்புப் படகுகள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை கையாண்டது. நூற்றுக்கும் மேற்பட்ட பெண் போராளிகளை தேசிய பேரிடர் மீட்புப் படை தனது அணியில் சேர்த்துள்ளது.*

---

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஸ்வஸ்த்வாயு' என்ற உடலில் செலுத்த தேவையில்லாத செயற்கை சுவாச வழங்கியை உருவாக்கியுள்ள அமைப்பு எது?**



*அ) DRDO*

***ஆ) CSIR ☑***

*இ) ISRO*

*ஈ) BARC*

- *அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் குழு – தேசிய வானூர்தி ஆய்வகத்தை (CSIR–NIL) சேர்ந்த விஞ்ஞானிகள், CSIR–IGIB மருத்துவப் பணியாளர்களுடன் இணைந்து உருவாக்கியுள்ள 'சுவஸ்த் வாயு' என்னும் உடலில் செலுத்த வேண்டிய தேவையில்லாத சுவாசக் கருவிக்கு அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது.*
- *மத்திய சுகாதார & குடும்பநல அமைச்சின் சுகாதார சேவைகளுக்கான தலைமை இயக்குநர் அமைத்த நிபுணர் குழு இந்தச் சுவாசக் கருவியை பரிசோதித்து, இதை 35% வரை பிராணவாயு உதவி தேவைப்படும் COVID நோயாளிகளுக்கு பயன்படுத்தலாம் என்று சான்றளித்தது.*

---

**10.அண்மையில் தொடங்கப்பட்ட 'டாய்கத்தான்' முன்னெடுப்புக்கு எத்தனை அமைச்சகங்கள் கூட்டு சேர்ந்துள்ளன?**

*அ) 5* ***ஆ) 6 ☑***

*இ) 7* *ஈ) 8*



- *உள்நாட்டு விளையாட்டுப் பொருட்கள் தொழிற்துறையை மேம்படுத்–துவதற்கும் இறக்குமதியைக் குறைப்பதற்குமாக இந்திய அரசு, "டாய் கத்தான்" என்ற புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.*
- *கல்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, ஜவுளி, வர்த்தகம் மற்றும் தொழிற்துறை, MSME, I&B உள்ளிட்ட ஆறு அமைச்சகங்கள் மற்றும் AICTE ஆகியவை இம்முன்னெடுப்புக்கு ஒத்துழைக்கின்றன. உள்நாட்டு விளையாட்டுப் பொருட்களை உருவாக்க மாணவர்கள், ஆசிரியர்கள், வடிவமைப்பு வல்லுநர்கள் மற்றும் துளிர்நிறுவனங்கள் இணைந்து செயல்படுவார்கள்.*

---

**1. 'இந்தியாவில் நீண்ட முதுமை குறித்த ஆய்வறிக்கை'யை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**



அ) புவி அறிவியல் அமைச்சகம்

***ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ☑***

இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

❖ *இந்தியாவில் நீண்ட முதுமை பற்றிய ஆய்வறிக்கை (LASI), அலை–1'ஐ மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் ஹர்ஷ் வர்தன் வெளியிட்டார். மக்கள் முதுமையடைவதால் நாட்டில் ஏற்படும் சுகாதார, பொருளாதார, சமூக மாற்றங்கள், விளைவுகள் குறித்த முழு அளவிலான, அறிவியல் பூர்வமான தேசிய ஆய்வே LASI ஆகும். முதியோர்களுக்கான தேசிய மற்றும் மாநில அளவிலான கொள்கைகளை வகுக்க இவ்வறிக்கை உதவும்.*

---

**2.இந்தியாவில் மிகவும் அருகிவரும் உயிரினங்களுக்கான மீட்பு திட்டத்தின்கீழ், எத்தனை வனவுயிரினங்கள் உள்ளன?**



அ) 12

ஆ) 16

***இ) 22 ☑***

ஈ) 35

❖ *தேசிய வனவுயிரி வாரியத்தின் நிலைக்குழுவானது அண்மையில் நாட்டில் மனித–வனவுயிரி மோதலை நிர்வகிப்பதற்கான ஆலோசனைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படும், 'கராகல்' என்ற காட்டுப்பூனையை மிகவும் அருகிவரும் உயிரினங்களின் பட்டியலில் சேர்க்கவும் அக்குழு ஒப்புதல் அளித்தது.*

❖ *தற்போது, மிகவும் அருகிவரும் உயிரினங்களுக்கான மீட்பு திட்டத்தின்கீழ் 22 வனவுயிரினங்கள் உள்ளன.*

---

**3. அண்மைச் செய்திகளின் இடம்பெற்ற, அங்கமாலி–அழுதா சபரி இரயில் திட்டமானது எந்த மாநிலத்தில் அமையவுள்ளது?**

அ) தமிழ்நாடு

***ஆ) கேரளம் ☑***

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

❖ *அங்கமாலி–அழுதா சபரி இரயில் திட்டத்திற்கு கேரள உட்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்த நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை இரயில்வே மேற்கொள்ளும்; அதே வேளையில், நிலையத்தின் வளர்ச்சி, பொதுத்துறை–தனியார் கூட்டாண்மையின் கீழ் இருக்கும். செலவினங்களைக்கழித்தபின்னர், வருமானம், கேரள மாநில அரசுக்கும் இரயில்வே துறைக்கும் இடையில் பகிரப்படும்.*

---

**4. எந்தவொரு கடவுளரின் பெயரையும் பயன்படுத்தி மேற்கொள் –ளப்படும் எந்தவொரு விளம்பரமும் சட்டத்துக்குப்புறம்பானது என அண்மையில் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம் எது?**

அ) மெட்ராஸ் உயர்நீதிமன்றம்

***ஆ) பம்பாய் உயர்நீதிமன்றம் ☑***

இ) குஜராத் உயர்நீதிமன்றம்

ஈ) கௌகாத்தி உயர்நீதிமன்றம்

❖ *பம்பாய் உயர்நீதிமன்றத்தின் ஔரங்காபாத் அமர்வு, எந்தவொரு கடவுளரின் பெயரையும் பயன்படுத்தி எந்தவொரு பொருளையும் விளம்பரம் செய்வது மற்றும் அப்பொருளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருப்பதாகக் கூறுவது சட்டத்துக்குப் புறம்பானது என்று அறிவித்துள்ளது.*

❖ *இந்த நடைமுறை, மகாராஷ்டிரா நரபலி தடுப்பு மற்றும் ஒழிப்பு மற்றும் பிற மனிதாபிமானமற்ற, தீய மற்றும் அகோரி நடைமுறைகள் மற்றும் பில்லி, சூனியம், ஏவல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வருகிறது. அனுமன் சாலிசா யந்திரம், இலக்ஷ்மி யந்திரம், மேரு மோதிரம் போன்ற பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விளம்பரங்களைத் தடுப்பதற்காக அம்மனு தாக்கல் செய்யப்பட்டது.*

---

**5.தேசிய பசு அறிவியல் தேர்வை நடத்தும் நிறுவனம் எது?**



அ) PeTA

***ஆ) தேசிய காமதேனு ஆயோக் ☑***

இ) தேசிய விலங்கு நல நிறுவனம்

ஈ) புளூ கிராஸ்

❖ *நாட்டுப்பசுக்கள்குறித்து இளம் மாணாக்கர்களிடையேயும், மக்களி –டையேயும் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், பசு அறிவியல் குறித்த நூல்களை அனைவருக்கும் கிடைக்க செய்யவும், "காமதேனு கௌ–விஞ்ஞான் பிரச்சார்–பிரசார் தேர்வு" என்னும் தேர்வை நடத்தவும் தேசிய காமதேனு ஆயோக் முன்வந்துள்ளது.*

❖ *இத்தேர்வு, ஆண்டுதோறும் நாடு முழுவதும் நடைபெறுகிறது. தேசிய காமதேனு ஆயோக் என்பது மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின்கீழ் பசுக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட ஓர் அரசு அமைப்பாகும்.*

---

**6. DRDO ஆனது பயோடைஜெஸ்டர் MK–II தொழில்நுட்பத்தை பின்வரும் எந்த மாநிலத்தின் மெட்ரோ இரயில் நெட்வொர்க்கில் நிறுவவுள்ளது?**

அ) தமிழ்நாடு

***ஆ) மகாராஷ்டிரா ☑***

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

❖ *இந்திய அரசின் முன்னணி ஆராய்ச்சி முகமையான பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (DRDO), இந்திய, மகாராஷ்டிர அரசுகளின் கூட்டு நிறுவனமான மகாராஷ்டிரா மெட்ரோ இரயில் நிறுவனமும் (மகா–மெட்ரோ) தண்ணீர் சேமிப்பிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் இணைந்து பணிபுரிந்து வருகின்றன.*


❖ *மெட்ரோ இரயில் மையங்களில் மனிதக்கழிவுகளை கையாள்வதற்காக மேம்படுத்தப்பட்ட பயோ டைஜெஸ்டர் (MK–II) தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆதரவை DRDO வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், மகாராஷ்டிரா மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்தானது.*

---

**7.ஆறு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள உஜாலா மற்றும் SLNP திட்டங்கள், எந்த அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகின்றன?**

*அ) உழவு மற்றும் உழவர்கள் நலன் அமைச்சகம்*

***ஆ) எரிசக்தி அமைச்சகம் ☑***



*இ) ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம்*

*ஈ) தகவல் தொடர்பு அமைச்சகம்*

❖ *அனைவருக்கும் LED விளக்குகள் வழங்கும் திட்டம் (UJALA), தேசிய தெருவிளக்கு திட்டம் (SLNP) ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2015 ஜன.5 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் திட்டங்கள் 6 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளன. இந்த இரண்டு திட்டங்களையும், எரிசக்தி அமைச்சகத்தின் கீழுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சியில், எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனம் (EESL) அமல்படுத்தியது.*

❖ *உஜாலா திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 36.69 கோடி LED பல்புகளை EESL நிறுவனம் வழங்கியது. தேசிய தெருவிளக்கு திட்டம்மூலம் நாடு முழுவதும், 1.14 கோடி LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன.*

---

**8.சிறு நிதி வங்கியாக மாற்றப்பட்ட இந்தியாவின் முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி எது?**

*அ) அகமதாபாத் வணிகர்கள் கூட்டுறவு வங்கி*

***ஆ) சிவாலிக் வணிகர்கள் கூட்டுறவு வங்கி ☑***

*இ) கோவா நகர கூட்டுறவு வங்கி*

*ஈ) ஆந்திர பிரதேச மகேஷ் நகர கூட்டுறவு வங்கி*

❖ *உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சிவாலிக் வணிகர்கள் கூட்டுறவு வங்கி இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ஒரு சிறு நிதி வங்கியாக உரிமம் பெற்றுள்ளது. இதன்மூலம், தானாக முன்வந்து மாறும் திட்டத்தின்கீழ், ஒரு சிறு நிதி வங்கியாக மாறிய நாட்டின் முதல் நகர கூட்டுறவு வங்கி ஆனது சிவாலிக் கூட்டுறவு வங்கி. இவ்வங்கி, 2021 ஏப்ரல் வாக்கில் தனது வணிகத்தைத் தொடங்கவுள்ளது.*

---

**9.நிதியமைச்சகம் இயக்கிய 4 மக்கள் மைய சீர்திருத்தங்களில் மூன்றனை முதலில் முடித்த இரண்டு மாநிலங்கள் எவை?**

*அ) தமிழ்நாடு & கேரளா*

***ஆ) மத்திய பிரதேசம் & மகாராஷ்டிரா ☑***

*இ) மத்திய பிரதேசம் & ஆந்திர பிரதேசம்*

*ஈ) கேரளா & கர்நாடகா*

❖ *மத்திய நிதியமைச்சகத்தின் செலவினத்துறை நிர்ணயித்த நான்கு சீர்திருத்தங்களில், ஒரே நாடு–ஒரே குடும்ப அட்டை, தொழில் செய்வதை எளிதாக்குதல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகிய 3 மக்கள் மைய சீர்திருத்தங்களை ம.பியும், ஆந்திர பிரதேசமும் நிறைவேற்றியுள்ளன.*

❖ *இதற்காக இந்த இரு மாநிலங்களுக்கும், புதிதாக தொடங்கப்பட்ட "மாநிலங்களின் மூலதன செலவுக்கான சிறப்பு நிதியுதவி" திட்டத்தின் கீழ் ₹1004 கோடி நிதி வழங்க நிதியமைச்சகத்தின் செலவினத்துறை முடிவு செய்துள்ளது.*

---

**10.உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்காக, 'கிசான் கல்யாண் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

***அ) உத்தர பிரதேசம் ☑***

*ஆ) மத்திய பிரதேசம்*

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

❖ *உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்காக உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கிசான் கல்யாண் திட்டத்தை தொடங்கினார். இந்தத் திட்டம், வரும் 2022'க்குள் உத்தர பிரதேச மாநில உழவர்களின் வருவாயை இரட்டிப்பாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் 825 வட்டங்களில் உழவர்களு–க்கான மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்படும் என்பதையும் அம்மாநில முதல்வர் உறுதிபட தெரிவித்தார்.*

---

**1.** **பின்வரும் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், பறவைக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்திய அரசு ஒரு கட்டுப்பாட்டு அறையை அமைத்துள்ளது?**

***அ) தில்லி ☑***

*ஆ) கர்நாடகா*

*இ) இராஜஸ்தான்*

*ஈ) தெலங்கானா*



❖ *நாட்டின் சில மாநிலங்களில் காகங்கள் & வெளிநாட்டுப்பறவைகளிடம், பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால், இவற்றை கட்டுப்படுத்துவதற்கான செயல்திட்டத்தை அமல்படுத்தவும், மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படவும் தில்லியில் கட்டுப்பாட்டு உதவி மையத்தை மத்திய கால்நடை பராமரிப்பு & பால்வளத்துறை ஏற்படுத்தியுள்ளது.*

❖ *இந்தக் கட்டுப்பாட்டு அறை, நிலைமையை கண்காணிப்பதும், மாநில அதிகாரிகள் மேற்கொண்ட தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தினசரி அடிப்படையில் பதிவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**2.** **சமீபத்தில் 'திறன்மிகு தொழிலாளர்' குறித்த எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**

***அ) ஜப்பான் ☑***

*ஆ) அமெரிக்கா*

*இ) தென் கொரியா*

*ஈ) ஆஸ்திரேலியா*



❖ *"குறிப்பிட்ட திறன்மிகு தொழிலாளர்" தொடர்பான அமைப்பு முறையை உருவாக்குவதற்கான அடிப்படை கட்டமைப்பிற்கான இந்தியா–ஜப்பான் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*

❖ *செவிலியர் பணி, கட்டிட தூய்மைப் பணி, சரக்கு கையாளும் தொழில், உள்ளிட்ட பதினான்கு தொழில் துறைகளில், தகுதியுள்ள, திறன்மிகு இந்திய தொழிலாளர்கள், ஜப்பான் நாட்டில் பணிபுரிவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுக்கும். ஜப்பானில் பணிபுரியப்போகும் இந்திய தொழிலாளர்களுக்கு, "குறிப்பிட்ட திறன்மிகு பணியாளர்" என்ற உறைவிட அந்தஸ்தை ஜப்பான் அரசு வழங்கவுள்ளது.*

---

**3.** **NSO'இன் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2020–21 நிதியாண்டில், இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி / சுருக்கம் என்னவாக இருக்கும்?**

*அ) + 3.2%*

*ஆ) + 1.2%*

*இ) – 6.4%*

***ஈ) – 7.7% ☑***




❖ *மத்திய புள்ளிவிவர மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தேசிய புள்ளியியல் அலுவலகம், 2020-2021 நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டது. 2020–2021ஆம் ஆண்டில் GDP வளர்ச்சி –7.7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் இது 4.2 சதவீதமாக இருந்தது.*

❖ *நடப்பு நிதியாண்டில் வேளாண்மையைத்தவிர அனைத்து துறைகளிலும் சுருக்கம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் துறையில் சுருக்கம் 9.4% ஆக இருக்கக்கூடும். வேளாண் துறை கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 3.4% வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

---

**4.** **NFHS–5'இன் பாதகங்களை கண்டு ஆராய்வதற்காக சுகாதார அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

*அ) ஹர்ஷ் வர்தன்*

***ஆ) பிரீத்தி பந்த் ☑***

*இ) இராதாகிருஷ்ணன்*

*ஈ) அபிநவ் குப்தா*

Ministry of Health & Family Welfare
Government of India

❖ *தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு–5'இன் பாதகங்களை கண்டறிவது குறித்து ஆய்வு செய்ய தொழில்நுட்ப நிபுணர் குழுவை சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் அமைத்துள்ளது. இணைச் செயலாளர் பிரீத்தி பந்த் தலைமையிலான இந்தக் குழு, ஊட்டச்சத்து குறைபாடு, குன்றல் நோய், குருதிச்சோகை மற்றும் C பிரிவு ஆகியவற்றுடன் தொடர்புடைய காரணிகளை மேம்படுத்த கொள்கை தலையீடுகளையும் பரிந்துரைக்கும்.*

❖ *இந்தக் குழுவில் மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் மாநில திட்ட அதிகாரிகள் உள்ளனர்.*

---

**5.** **இந்திய–அமெரிக்க மருத்துவர் இராஜ், பின்வரும் எந்த நாட்டின் இராணுவத்தின் முதல் தலைமைத் தகவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்?**

*அ) சிங்கப்பூர்*

***ஆ) அமெரிக்கா ☑***

*இ) ஜப்பான்*

*ஈ) பிரிட்டன்*



❖ *அமெரிக்க இராணுவத்தின் முதல் தலைமைத் தகவல் அதிகாரியாக இந்திய–அமெரிக்கர் Dr இராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2020 ஜூலையில் உருவாக்கப்பட்ட இப்பதவி 3 நட்சத்திர ஜெனரலுக்கு சமமானதாகும். அமெரிக்க இராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக, 16 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தை அவர் மேற்பார்வையிடுவார்.*

❖ *அமெரிக்க இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான கொள்கை மற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அவர் வழிநடத்துவார். அவர் இராணுவ செயலாளரின் முதன்மை ஆலோசகராக பணியாற்றுகிறார்.*

---

**6.** **வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்ட, 'Fatah–1' என்பது பின்வரும் எந்நாட்டின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏவுகணையாகும்?**

*அ) ஐக்கிய அரபு அமீரகம்*

*ஆ) இஸ்ரேல்*

***இ) பாகிஸ்தான் ☑***

*ஈ) ஆப்கானிஸ்தான்*



❖ *உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வழிசெலுத்தப்பட்ட பல்–ஏவு ஏவுகணை முறைமையை பாகிஸ்தான் வெற்றிகரமாக*

சோதித்துள்ளது. 'பத்ரா–1' என்று பெயரிடப்பட்ட இந்த அமைப்பு, 140 கிமீ தூர வரம்பில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டது.

❖ வழிசெலுத்தப்பட்ட இப்பல்–ஏவு ஏவுகணை முறைமை, வழக்கமான ஏவுகணைகளைவிட மிகத்துல்லியமாக தாக்கும்.

---

**7.லடாக்கின் நிலத்தையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவர் யார்?**

அ) அமித் ஷா

**ஆ) G கிஷன் ரெட்டி ☑**

இ) ராவ் இந்திரஜித் சிங்

ஈ) ஜித்தேந்திர சிங்



❖ லடாக்கின் மொழி, கலாச்சாரம் மற்றும் நிலத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு குழுவை அமைக்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. இக்குழுவுக்கு உள்துறை இணையமைச்சர் G கிஷன் ரெட்டி தலைமைதாங்குவார். இதில் லடாக், லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில், மத்திய அரசு மற்றும் லடாக் நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அடங்குவர்.

---

**8.உலக உணவுவிலைக்குறியீட்டை வெளியிடுகின்ற அமைப்பு எது?**

அ) UNICEF

**ஆ) FAO ☑**

இ) WWF

ஈ) WFP

❖ ஐநா உணவு நிறுவனமான உணவு மற்றும் உழவு அமைப்பு, உலக உணவுவிலைக்குறியீட்டை வெளியிடுகிறது. அண்மைய பதிப்பின்படி, கடந்த நவம்பர் மாதத்தில் 105.2 ஆக இருந்த உலக உணவு விலைகள் தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக தற்போது டிசம்பர் மாதத்தில் 107.5 புள்ளிகளாக உயர்ந்துள்ளன. சர்க்கரையைத் தவிர்த்து உணவுக் குறியீட்டின் அனைத்து முக்கிய வகைகளும் உயர்ந்துள்ளன.

---

**9.உலகின் முதல் இரட்டையடுக்கு மிகநீண்ட பெட்டக இரயிலை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?**

அ) ஜப்பான்

ஆ) சீனா

**இ) இந்தியா ☑**

ஈ) இரஷ்யா




❖ சமீபத்தில் இந்தியா உலகின் முதல் இரட்டையடுக்கு மிகநீண்ட தூர பெட்டக இரயிலை அறிமுகப்படுத்தியது. மேற்கு பிரத்யேக சரக்குப் பாதையின் 306 கிமீ தூர ரெவாரி மதார் பிரிவையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். இப்பிரிவு தொடங்கப்படுவதன்மூலம், மேற்கு மற்றும் கிழக்கு சரக்குப் பாதைகள் இடையே தடையற்ற இணைப்பு ஏற்படும்.

---

**10.சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) அமைக்கப்பட்ட கல்வி ஆலோசனைக்குழுவின் தலைவர் யார்?**

அ) B P கனுங்கோ

ஆ) R காந்தி

**இ) N S விஸ்வநாதன் ☑**

ஈ) உர்ஜித் படேல்



❖ ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையாளர்கள் கல்லூரியின் முழுநேர இயக்குநருக்கு ஆலோசனை வழங்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி ஒரு கல்வி ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் தலைவராக ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் N S விஸ்வநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இந்த நடவடிக்கை அதன் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை ஊழியர்களிடையே மேற்பார்வையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**1.**பிரபல இராசாங்க அமைச்சரும் – துறவியுமான 'பசவேஸ்வரா' சார்ந்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



*அ) தில்லி*

***ஆ) கர்நாடகா ☑***

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) தெலங்கானா*

❖ *12ஆம் நூற்றாண்டைய கல்யாணி சாளுக்கிய வம்சத்தின் ஆட்சிக் காலத்தில், அமைச்சரும் லிங்காயத் துறவியுமாக இருந்தவர் 'பசவேஸ்வரர்' என்னும் 'பசவண்ணா'. அவர் கர்நாடகாவில் உள்ள லிங்காயத் சமூகத்தின் பிரபல ஆளுமையாக கருதப்படுகிறார். சமீபத்தில், கர்நாடக முதல்வர் B S எடியூரப்பா, பசவகல்யாணியில் ₹500 கோடி மதிப்பீட்டில், 'புதிய அனுபவ மண்டபம்' நிறுவுவதற்காக அடிக்கல் நாட்டினார். இது அவரின் வாழ்ந்த இடமாக கருதப்படுகிறது.*

---

**2.**புதிய 'பள்ளிப்பை கொள்கை'யை அறிமுகப்படுத்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



***அ) தில்லி ☑***

*ஆ) கர்நாடகா*

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) தெலங்கானா*

❖ *தேசிய கல்விக்கொள்கைக்கு இணங்க, மாணவர்களின் பள்ளிப்பைகளின் எடையை குறைக்க தில்லி அரசு ஒரு புதிய "பள்ளிப்பை கொள்கையை" அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கொள்கையை விரைவில் செயல்படுத்துமாறு தேசிய தலைநகர பிராந்தியத்தில் உள்ள பள்ளிகளுக்கு தில்லி அரசு அறிவுறுத்தியுள்ளது. இக்கொள்கையின்படி, 1–10 வகுப்புகளுக்கு இடையில் உள்ள மாணவர்களுக்கான பள்ளிப் பைகளின் எடை அவர்களின் உடல் எடையில் 10 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.*

---

**3.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மெலிபோனிகல்ச்சர்' என்றால் என்ன?



***அ) கொடுக்கற்ற தேனீ வளர்ப்பு முறை ☑***

*ஆ) விதைகளற்ற கனி உற்பத்தி முறை*

*இ) இறகற்ற கோழி வளர்ப்பு முறை*

*ஈ) விதைகளற்ற காய்கள் உற்பத்தி முறை*

❖ *காசர்கோடை தலைமையிடமாகக்கொண்ட உழவர்கள் பல்கலைக் கழகமான கர்ஷகா வித்யாபீடம், சம்பேரியில் ஒரு 'மெலிபோனி கல்ச்சர்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மெலிபோனிகல்ச்சர் குறித்த 4 மாத பயிற்சி வகுப்பு (அதாவது கொடுக்கற்ற தேனீ வளர்ப்பு) தொடங்கப்பட்டது. அடுத்தகட்ட உதவியுடன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மன்றத்தால் வடிவமைக்கப்பட்ட, 'சுதேச தேன்கூடுகளும்; இந்தப் பயிற்சியின் வழங்கப்படும்.*

---

**4.**மக்களவை சபாநாயகரின் சமீபத்திய அறிவிப்பின்படி, பள்ளிகள் & கல்லூரிகளில், எந்தப் பரப்புரை மேற்கொள்ளப்பட உள்ளது?

*அ) Know your MLA* *ஆ) Know your MP*

*இ) Know your constituency* ***ஈ) Know your Constitution ☑***

❖ *மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா சமீபத்தில் உத்தரகண்ட் பஞ்சாயத்து ராஜ் துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இந்த நிகழ்வின்போது, நாடு முழுவதுமுள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில், "உங்கள் அரசியலமைப்பை அறிந்துகொள்ளுங்கள்" என்ற பெயரில் ஒரு பரப்புரையை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளும் என்று அவர் அறிவித்தார். இது அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**5.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, வர்த்தக கொள்கை மீளாய்வுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

*அ) உலக வங்கி*

***ஆ) WTO ☑***

*இ) IMF*

*ஈ) FAO*

❖ *வர்த்தக கொள்கை மீளாய்வு (Trade Policy Review) என்பது உலக வர்த்தக அமைப்பின் (WTO) கீழ் உள்ள ஒரு பொறிமுறையாகும். இதில், உறுப்பினர்களின் வர்த்தகம் மற்றும் அது தொடர்புடைய கொள்கைகள் ஆராயப்படுகின்றன. அதன் விதிகளுக்கு இணங்குவதை மேம்படுத்துகின்றன.*

❖ *அண்மையில், இந்தியாவின் ஏழாவது வர்த்தக கொள்கை ஆய்வு உலக வர்த்தக அமைப்பில் ஜெனீவாவில் உள்ள உலக வர்த்தக அமைப்பில் முடிந்தது. இந்தியாவின் முந்தைய TPR, கடந்த 2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. COVID–19'க்கான புதிய நோயறிமுறைகள் மற்றும் தடுப்பூசி உற்பத்தித்திறன் மற்றும் அவை சரியான நேரத்தில் கிடைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா ஆதரித்தது.*

---

**6.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற IREDA என்பது பின்வரும் எந்த அமைச்சகத்தின் கீழ்வரும் ஓர் அமைப்பாகும்?

***அ) எரிசக்தி அமைச்சகம் ☑***

*ஆ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்*

*இ) தகவல் தொடர்பு அமைச்சகம்*

*ஈ) MSME அமைச்சகம்*

❖ *புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் 'மினி இரத்னா' நிறுவனமான இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (IREDA), புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்காக தேசிய நீர்மின்சார கழகத்துடன் (NHPC) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.*

❖ *இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, தேசிய நீர்மின்சார கழகத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எரிசக்தி சேமிப்பு உள்ளிட்ட திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப நிதி சேவைகளை இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை வழங்கும்.*

---

**7.**அடிப்படை வாழ்வுக்கான ஊதியத்தை பரிந்துரைத்த, மத்திய தொழிலாளர் அமைச்சக ஆணையத்தின் தலைவர் யார்?



*அ) சந்தோஷ் குமார் கங்வார்*

***ஆ) C V ஆனந்த போஸ் ☑***

*இ) அபூர்வ சந்திரா*

*ஈ) அலோக் குமார் மாத்தூர்*

❖ *COVID-19 தொற்றுநோய்களின்போது ஒப்பந்தத்தொழிலாளர்களின் நலன் மற்றும் மேம்பாட்டுக்கான செயல்திட்டத்தைத் தயாரிப்பதற்காக தொழிலாளர் அமைச்சின் மத்திய ஆலோசனை ஒப்பந்த தொழிலாளர் வாரியத்தின்கீழ் உறுப்பினர் ஆணையம் ஒன்று உருவாக்கப்பட்டது.*

❖ *இவ்வாணையத்தின் பொறுப்பாளராக இருந்த மூத்த IAS அதிகாரி C V ஆனந்த போஸ், வேலையிழப்பு ஏற்பட்டால் அடிப்படை வாழ்வுக்கான ஊதியத்தை செலுத்த பரிந்துரைத்துள்ளார். இந்திய தொழிலாளர் ஆணையத்தை ஒரு மைய அமைப்பாக நிறுவவும் அவர் முயன்றார்.*

---

**8.** 'Pioneers' என்பது எந்த விண்வெளி மையத்தின் திட்டமாகும்?



*அ) இந்தியா*

***ஆ) அமெரிக்கா ☑***

*இ) பிரிட்டன்*

*ஈ) ஜெர்மனி*

❖ *'Pioneers' திட்டமானது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA'ஆல் கடந்த 2020ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அது, சிறிய வன்பொருளைப்பயன்படுத்தி வானியற்பியல் அறிவியல்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

❖ *அண்மையில், இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, NASA, நான்கு சிறிய அளவிலான வானியற்பியல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அஸ்பெரா, பண்டோரா மற்றும் ஸ்டார்பர்ஸ்ட் என்ற சிறிய செயற்கைக் கோள்கள் & PUEO என்ற பலூன் திட்டம் ஆகியவை இதில் அடங்கும். இத்திட்டங்கள் அண்ட நிகழ்வுகளைப்பற்றி ஆய்வுசெய்ய உதவும்.*

---

**9.**நாட்டின் முதல் சூரிய மின்சார RO-RO சேவையை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ள மாநிலம் எது?



***அ) கேரளா ☑***

*ஆ) மேற்கு வங்கம்*

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

❖ *நாட்டின் முதல் சூரிய மின்சார ரோ-ரோ சேவை, 2021-2022ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும் என்று கேரள ஆளுநர் சட்டமன்றத்தில் அறிவித்தார். மாநிலத்தின் முதல் நீர்-நில இயக்க பேருந்து சேவை தொடங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். சரக்குகள் இயக்கம் மற்றும் அதிவேக சுற்றுலா சேவைகளுக்காக படகு சேவையை தொடங்கவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.*

---

**10.**பெண்களின் மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் எந்த மாநகராட்சி, 'பீரியட் ரூம்' என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது?



*அ) திருவனந்தபுரம் மாநகராட்சி*

***ஆ) தானே மாநகராட்சி ☑***

*இ) விசாகப்பட்டிணம் மாநகராட்சி*

*ஈ) பெங்களூரு மாநகராட்சி*

❖ *மாநகராட்சியில் அமைந்துள்ள கழிப்பறைத் தொகுதிகளில், "பீரியட் ரூம்" ஒன்றை தானே மாநகராட்சி அறிமுகப்படுத்தியுள்ளது. பத்துக்கு ஒரு கழிப்பறையில், தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய "பீரியட் ரூம்" ஆக மாற்றப்பட்டுள்ளது. மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

---

**1.**பின்வரும் எத்துறையில், 'ஒற்றைச்சாளர ஒப்புதல் அமைப்பை' உள்துறை அமைச்சர் தொடங்கவுள்ளார்?



***அ) நிலக்கரி சுரங்கங்கள் ☑***

*ஆ) DISCOM*

*இ) எஃகு ஆலை*

*ஈ) செப்பு சுரங்கங்கள்*

- ❖ *இந்தியாவில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு ஒப்புதலையும், அனுமதியையும் அளிப்பதற்கான ஒற்றைச்சாளர தளத்தை மத்திய நிலக்கரி அமைச்சகம் தொடங்கியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இத்தளத்தைத் தொடங்கிவைத்தார். இந்தியாவின் நிலக்கரி துறையில் எளிதான வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு இது அடித்தளமாக அமையும்.*

---

**2.**தேசிய இளையோர் நாடாளுமன்ற விழாவின் முதலாவது பதிப்பு, எந்த ஆண்டில் நடைபெற்றது?




*அ) 2015*

*ஆ) 2017*

***இ) 2019 ☑***

*ஈ) 2020*

- ❖ *முதல் தேசிய இளைஞர் நாடாளுமன்ற விழாவானது 2019 பிப்ரவரி மாதம் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் திருவிழாவின் இரண்டாவது பதிப்பு, 2020 டிசம்பரில் தொடங்கப்பட்டது.*
- ❖ *மாவட்ட மற்றும் மாநில அளவிலான நிகழ்வுகளுக்குப் பிறகு, இறுதி நிகழ்வு சமீபத்தில் நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது. 18 முதல் 25 வயது வரையிலான இளைஞர்கள் தேசிய நடுவர் மன்றத்தின் முன் பேசுவார்கள், அவர்களில் மூன்று பேர் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவார்கள்.*

---

**3.**எந்த அதிவேக ரயில் திட்டத்திற்காக, நொய்டாவிலிருந்து LiDAR ஆய்வு தொடங்கப்பட்டது?

***அ) தில்லி–வாரணாசி அதிவேக இரயில் வழித்தடம் ☑***

*ஆ) தில்லி–பாட்னா அதிவேக இரயில் வழித்தடம்*

*இ) மும்பை – அகமதாபாத் அதிவேக இரயில் வழித்தடம்*

*ஈ) சென்னை–பெங்களூரு அதிவேக இரயில் வழித்தடம்*

- ❖ *தில்லி–வாரணாசி அதிவேக இரயில் வழித்தடம் அமைப்பதற்கான ஆய்வுப்பணி பெருநகர நொய்டாவிலிருந்து தொடங்கப்பட்டது. இதன்படி, ஹெலிகாப்டர்மீது லேசர் கருவிகள் பொருத்தப்பட்டு கள ஆய்வு தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன.*
- ❖ *தேசிய அதிவேக இரயில் கழகம், LiDAR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூன்று – நான்கு மாதங்களுக்குள் களம் தொடர்பான தகவல்களையும், தரவுகளையும் சேகரிக்கிறது. நுண்ணிய விவரங்களை சேகரிப்பதற்காக இந்த ஆய்வு, 60 மெகாபிக்சல் கேமராக்களைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.*

---

**4.**உலக ஹிந்தி நாளானது, எந்த நகரத்தில் நடந்த முதல் உலக ஹிந்தி மாநாட்டின் ஆண்டுநிறைவை நினைவுகூர்கிறது?




*அ) வாரணாசி*

***ஆ) நாக்பூர் ☑***

*இ) புனே*

*ஈ) தில்லி*

- ❖ *ஒவ்வோர் ஆண்டும் ஜன.10 அன்று உலக ஹிந்தி நாள் கொண்டாடப்படுகிறது. இது விஸ்வ ஹிந்தி திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது, இது, 1975ஆம் ஆண்டு இதே நாளில் நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக ஹிந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.*
- ❖ *உலக ஹிந்தி நாள் முதன்முதலில் கடந்த 2006ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. ஹிந்தி, நாட்டின் அதிகம் பேசப்படும் மொழி மட்டுமல்ல மேலும், உலகிலேயே அதிகம் பேசப்படும் மூன்றாவது மொழியுமாகும்.*

---

**5.**இந்திய புவியியல் ஆய்வுமையத்தின் கூற்றுப்படி, எந்த இந்திய மாநிலத்தில் வனேடியம் (Vanadium) இருப்பு இருக்கக்கூடும்?



*அ) ஜார்க்கண்ட்*

*ஆ) பீகார்*

***இ) அருணாச்சல பிரதேசம் ☑***

*ஈ) ஒடிசா*

- ❖ *இந்திய புவியியல் ஆய்வு மையமானது (GIS) அருணாச்சல பிரதேச மாநிலத்தை ஆராய்ந்து வருகிறது. அம்மாநிலம் இந்தியாவின் பிரதான வனேடியம் இருப்புக்கொண்ட மாநிலமாக இருக்கலாம் என GIS கூறியுள்ளது.*
- ❖ *வனேடியம் என்பது எஃகு மற்றும் டைட்டானியத்தை வலுப்படுத்த பயன்படும் ஓர் உயர்–மதிப்புடைய உலோகமாகும். வனாடிஃபெரஸ் காந்தத்தாதுக்களை செயலாக்கும்போது சேகரிக்கப்படும் கசடுகளில் இருந்து, இது ஒரு துணைப்பொருளாக சேகரிக்கப்படுகிறது.*

---

**6.**ஃபின்டெக் புத்தாக்க மையத்தை அமைப்பதற்காக கான்பூர் IITஉடன் கூட்டிணைந்துள்ள இந்திய வங்கி?

punjab national bank ...the name you can BANK upon!

*அ) பாரத வங்கி*

*ஆ) கனரா வங்கி*


***இ) பஞ்சாப் தேசிய வங்கி ☑***

*ஈ) ICICI வங்கி*

- ❖ *நாட்டின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் தேசிய வங்கியானது ஃபின்டெக் புத்தாக்க மையத்தை நிறுவுவதற்–காக IIT கான்பூர் மற்றும் FIRST (அறிவியல் & தொழில்நுட்பத்தில் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான அறக்கட்டளை) உடன் கூட்டு சேர்ந்துள்ளது. IIT வளாகத்திலேயே இம்மையம் நிறுவப்படும். அது, வங்கி மற்றும் நிதித்துறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப தீர்வுகளின் மீதான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும்.*

---

**7.**அண்மையில் வெளியான, "India's 71–Year Test: The Journey to Triumph in Australia" என்ற நூலின் ஆசிரியர் யார்?




***அ) R கௌஷிக் ☑***

*ஆ) VVS லக்ஷ்மன்*

*இ) ஹர்பஜன் சிங்*

*ஈ) சுனில் கவாஸ்கர்*

- *இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளரும், இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரருமான ரவி சாஸ்திரி, "India's 71–Year Test: The Journey to Triumph in Australia" என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டார்.*
- *இந்நூலை கிரிக்கெட் பத்திரிகையாளர் R கௌசிக் எழுதியுள்ளார். இது, பிராட்மேன் அருங்காட்சியகத்தின் ஒரு முன்னெடுப்பாகும். இது, ஆஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் முதல் பன்னிரண்டு சுற்றுப் பயணங்களை விவரிக்கிறது. பிராட்மேன் அருங்காட்சியகத்தில் இருந்து 200'க்கும் மேற்பட்ட அரிய படங்களும் இந்நூலில் அடங்கும். சிட்னி மைதானத்தில் முன்னாள் இந்திய அணித் தலைவர் சுனில் கவாஸ்கரின் உருவப்படம் வெளியிடப்பட்டது.*

---

**8.** 16ஆவது பிரவாசி பாரதிய திவாஸின் கருப்பொருள் என்ன?

***அ) Contributing to Aatmanirbhar Bharat ☑***

*ஆ) Redefining engagement with the Indian diaspora*

*இ) Role of Indian Diaspora in building a New India*

*ஈ) Contributing to New India*

- *ஜன.9 அன்று பிரவாசி பாரதிய திவாஸின் 16ஆவது பதிப்பை பிரதமர் மோடி மெய்நிகராக திறந்து வைத்தார். வெளிநாடுவாழ் இந்தியர்கள் இந்திய சமூக–பொருளாதார வளர்ச்சியின் ஒருபகுதியாக திகழ்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.*
- *"தற்சார்பு இந்தியாவுக்கு பங்களியுங்கள்" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். சுரினாம் குடியரசின் தலைவர், இதன்போது முக்கிய குறிப்புரையை வழங்கினார்.*

---

**9.**எந்த ஆயுதப்படையின் புதிய தலைமை இயக்குநராக சுபோத் குமார் ஜெய்ஸ்வால் பொறுப்பேற்றுள்ளார்?



***அ) CISF ☑***

*ஆ) CRPF*

*இ) ITBP*

*ஈ) NSG*

- *மூத்த IPS அதிகாரியான சுபோத் குமார் ஜெய்ஸ்வால் மத்திய தொழிலக பாதுகாப்புப்படையின் (CSIF) புதிய தலைமை இயக்குநராக பொறுப்பே–ற்றார். 2019 முதல் அவர் மகாராஷ்டிரா காவல்துறையின் தலைவராக பணியாற்றி வருகிறார். முன்னதாக நாட்டின் சிறப்பு பாதுகாப்புக் குழுவில் பணியாற்றிய அவர், பிரதமரைப் பாதுகாத்தார்.*

---

**10.**சுய–உதவிக்குழுக்களுக்கு உதவுவதற்காக, பின்வரும் எந்த வங்கி, 'NABFOUNDATION' உடன் கூட்டிணைந்துள்ளது?

*அ) பாரத வங்கி*

*ஆ) கனரா வங்கி*

***இ) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ☑***

*ஈ) ICICI வங்கி*

- *சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ஆனது NABFOUNDATION உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா தன்னுடன் கணக்கு வைத்திருக்கும் சுய–உதவிக்குழுக்களுக்கு இணையற்ற செயல்பாட்டு மூலதனத்தை வழங்கும் மற்றும் NABARD நிதியுதவி வழங்கும் 'My Pad My Right' திட்டத்தை நடத்தும். NABFOUNDATION என்பது NABARD'இன் ஓர் இணை அமைப்பாகும்.*

---

**1.** 'STEM' கல்வியை மேம்படுத்துவதற்காக, நாடு முழுவதுமுள்ள 100 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை பயன்படுத்தவுள்ள அமைப்பு எது?

*அ) DRDO*

***ஆ) ISRO ☑***

*இ) BARC*

*ஈ) இந்திய வான்படை*

❖ *நாடு முழுவதும் STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்), விண்வெளி கல்வி மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் சம்பந்தமான புதுமைகளை பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் வகையில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ISRO, 100 அடல் ஆய்வகங்களைப் பயன்படுத்த இருப்பதாக அடல் புத்தாக்க இயக்கம், NITI ஆயோக், ISRO ஆகியவை அறிவித்துள்ளன.*

---

**2.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பாரம்பரிய நிலைமாற்று குழு'வானது, கீழ்க்காணும் எந்த மத்திய அமைச்சகத்தின் அதிகாரியின் தலைமையில் உள்ளது?

*அ) உள்துறை அமைச்சகம்*

***ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑***

*இ) கலாச்சார அமைச்சகம்*

*ஈ) சுற்றுலா அமைச்சகம்*

❖ *'பாரம்பரிய நிலைமாற்று குழு'வானது (Heritage Conversation Committee – HCC) மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தலைமையில் உள்ளது.*

❖ *புதிய நாடாளுமன்ற கட்டடத்திற்கான நடுவணரசின் முன்மொழிவை இக்குழு அண்மையில் அனுமதித்துள்ளது. மத்திய விஸ்டா திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததுடன், திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு HCC'இன் ஒப்புதல் கட்டாயம் எனக்கூறியது. இக்குழுவில் பிற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளும் உள்ளனர்.*

---

**3.** இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் எத்தனை சதவீதம் பாதுகா–க்கப்பட்ட பகுதிகளாக உள்ளன?

*அ) 2.5%*

***ஆ) 5% ☑***

*இ) 7.5%*

*ஈ) 10%*

❖ *மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், 146 தேசிய பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயங்கள் மற்றும் நாட்டின் உயிரியல் பூங்காக்களின் மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டை வெளியிட்டார்.*

❖ *தற்போது, இந்தியாவில் 903 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளன. அது, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 5% ஆகும். ஒவ்வோர் ஆண்டும் 10 சிறந்த தேசிய பூங்காக்கள், 5 கடலோர மற்றும் கடல் பூங்காக்கள் மற்றும் நாட்டின் முதல் 5 உயிரியல் பூங்காக்கள் தரவரிசைப்படுத்தப்–பட்டு அவற்றுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.*

---

**4.** 'Sea Vigil – 21' என்பது பின்வரும் எந்த நாட்டால் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சியாகும்?

***அ) இந்தியா ☑***



*ஆ) இலங்கை*

*இ) சீனா*

*ஈ) ஐக்கியப் பேரரசு*

❖ *ஈராண்டுக்கு ஒருமுறை நிகழும் நாடு தழுவிய கடலோரப் பாதுகாப்பு பயிற்சியான 'கடல் கண்காணிப்பு – 21', 2021 ஜன.12 & 13 ஆகிய தேதிகளில் நடந்தது. 2019 ஜனவரியில் தொடங்கப்பட்ட இந்தப்பயிற்சி, 7516 கிமீ நீளமுள்ள ஒட்டுமொத்த கடற்கரைப் பகுதியிலும், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திலும் நடத்தப்படும்.*

❖ *அனைத்து பதிமூன்று கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் இதில் ஈடுபடும். கடல்சார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துவதை இந்த பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**5.** கோவாவில் நடக்கும் 51ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில் சிறப்பு கவனம் பெறும் நாடு எது?

*அ) பிரான்ஸ்*

*ஆ) இரஷ்யா*

***இ) வங்காளதேசம் ☑***

*ஈ) இலங்கை*

❖ *2021 ஜன.16–24 வரை திட்டமிடப்பட்டுள்ள இந்தியாவின் 51ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில், வங்கதேசம் சிறப்பு கவனம் பெறும் நாடாக உள்ளது. திரைத்துறைக்கான அந்நாட்டின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக, 4 வங்கதேச திரைப்படங்கள் சிறப்பு கவனப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.*

❖ *51ஆவது இந்திய பன்னாட்டு திரைப்பட விழா, 2020'க்கு தேர்வு செய்யப்பட்ட இந்திய திரைப்படங்களின் பட்டியலில் தமிழ் திரைப் படங்களான அசுரன் மற்றும் தேன் இடம்பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.*

---

**6.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை நிறைவு செய்த முதலாவது வடகிழக்கு மாநிலமும், கூடுதல் கடன் பெறுவதற்கு ஒப்புதல் பெற்ற மாநிலமும் எது?

*அ) நாகாலாந்து*

*ஆ) அருணாச்சல பிரதேசம்*

***இ) மணிப்பூர் ☑***

*ஈ) திரிபுரா*

❖ *மத்திய நிதி அமைச்சகத்தின் செலவினத்துறை, கடந்த 2020 மே 17 அன்று அறிவித்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சீர்திருத்தங்களை, மணிப்பூர் நான்காவது மாநிலமாக அமல்படுத்தியுள்ளது. இதையடுத்து, இந்த மாநிலம் திறந்தவெளிச் சந்தைக் கடன் முறை மூலம், ₹75 கோடி கடனைக் கூடுதலாகப் பெற தகுதிபெற்றுள்ளது.*

❖ *ஏற்கனவே இந்தச் சீர்திருத்தங்களை நிறைவேற்றியுள்ள ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்களுடன் மணிப்பூர் தற்போது இணைந்துள்ளது.*

**7.** "புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவு தளத்தை" தொடங்குவதற்காக, எந்த மின்னணு–வணிக நிறுவனத்துடன் NITI ஆயோக் கூட்டிணைந்துள்ளது?

*அ) அமேசான்*

***ஆ) பிளிப்கார்ட் ☑***

*இ) மிந்த்ரா*

*ஈ) ஸ்னாப்டீல்*

- *"புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவு தளத்தைத் தொடங்க, NITIT ஆயோக், பிளிப்கார்ட்டுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்தியாவில் பெண் தொழில்முனைவோருக்கு சமூக அனுபவத்தை மேம்படுத்தும் முயற்சியாக இது கருதப்படுகிறது. இத்தளம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பெண்களை ஒன்றிணைத்து, அவர்களின் தொழில்முனைவு எண்ணங்களை உணர்ந்துகொள்ளும்.*

---

**8.**நிதி நிலைத்தன்மை அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?

*அ) உலக வங்கி*

*ஆ) IMF*

***இ) இந்திய ரிசர்வ் வங்கி ☑***

*ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி*

- *இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள நிதி நிலைத்தன்மை அறிக்கை, ஆனது, 2020 செப்டம்பர் மாதத்தில் 7.5% ஆக இருந்த இந்தியாவில் உள்ள வங்கிகளின் மொத்த செயல்படாத சொத்துக்கள், 2021 செப்டம்பர் மாதத்திற்குள் 13.5% ஆக உயரலாம் எனக்கணித்துள்ளது. கடும் நிதி அழுத்த சூழ்நிலையில், இந்தச்சதவீதம் 14.8% ஆக மோசமடையக்கூடும்.*

---

**9.**ஆயுதப்படை படைவீரர்கள் நாள் கொண்டாடப்படும் தேதி எது?

*அ) ஜனவரி 11*

*ஆ) ஜனவரி 12*



*இ) ஜனவரி 13*

***ஈ) ஜனவரி 14 ☑***

- *முதல் இந்திய இராணுவத் தளபதி K M கரியப்பாவின் ஓய்வுத்தேதியை நினைவுகூரும் வகையில், 2017'இல் நிறுவப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜன.14 அன்று 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாட –ப்பட்டு வருகிறது. K M கரியப்பா, 1949 முதல் 1953 வரை இந்திய இராணுவத்தின் தளபதியாக பணியாற்றினார்.*

---

**10.** ஒவ்வோர் ஆண்டும், இந்தியா முழுவதும், 'இராணுவ நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

*அ) ஜனவரி 12*

*ஆ) ஜனவரி 13*




*இ) ஜனவரி 14*

***ஈ) ஜனவரி 15 ☑***

- *ஒவ்வோர் ஆண்டும் ஜன.15ஆம் தேதியன்று, 'இராணுவ நாள்' நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 73ஆவது 'இராணுவ நாள்' அண்மையில் 2021 ஜன.15 அன்று அனுசரிக்கப்பட்டது.*
- *1949 ஜன.15 அன்று, ஜெனரல் K M கரியப்பா, விடுதலைக்குப்பிறகான இந்திய இராணுவத்தின் முதல் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றார். அந்நாள் ஒவ்வோர் ஆண்டும் 'இராணுவ நாளாக' நினைவுகூரப்படுகிறது.*

---